REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 12உ சனி (29—10—55) ★ ★ வெளியீடு: ஐப்பசி 13உ ஞாயிறு (30—10—55) [இதழ் 117

வடநாட்டில் கைத்தறி அபிவிருத்தி

ஒரு மாவட்டத்தில் 70,000 பேருக்கு வேலை

ஷோலாப்பூர், அக். 27—

ஷோலாப்பூர் மாவட்டத்தில் சர்க்கார் மேற்கொண்ட பல்வேறு திட்டங்களின் விளைவாக கைத்தறித் தொழில் பெரும் முன்னேற்றம் அடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மாவட்டத்தில் கைத்தறிதான் முதன்மையான குடிசைத் தொழில் என்றும், இதனால் சுமார் 70,000 பேருக்குமேல் வேலை பெற்றிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

கவர்னர் முன்ஷியின் இந்தி மொழி வெறி!

வடவரின் ஏகாதிபத்திய நோக்கிற்கு தக்க சான்று

இந்தி தெரியாதோருக்கு இடம் இல்லையாம்!

போதனா மொழியாக இந்தியே இருக்க வேண்டுமாம்

ஆரியக் கலாச்சாரப் பாதுகாவலர்களான வட நாட்டு ஏகாதிபத்தியவாதிகள், திராவிட மக்களை என்றென்றைக்கும் நிரந்தர அடிமைகளாக்கி வைத்திருக்க எவ்வளவு பேராசை கொண்டவர்களாயிருக்கின்றனர் என்பதை, அவர்கள் கொண்டுள்ள இந்தி மொழி வெறி தெளிவாகச் சொல்லிக்கொண்டிருக்கிறது.

இந்தி மொழி இந்தியா முழுமையிலும் ஆதிக்கம் பெற்றால்தான், தங்களது ஏகாதிபத்தியம் நீடிக்க முடியும்—என்ற நிலை இருப்பதால், இந்தி மொழியை எப்படியேனும் எல்லாத் துறைகளிலும் புகுத்திவிட வேண்டும் என்று அவர்கள் மனப்பால் குடிக்கின்றனர்.

நாதியாத் எனும் இடத்தில் 'குஜராத் சாகித்ய பரிஷத்' என்ற மன்றத் துவக்க விழாவிற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்திய உத்தரப் பிரதேச கவர்னர் கே. எம் முன்ஷி வடநாட்டவரின் இந்தி மொழி வெறி எவ்வளவு என்பதை ஐயமற எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இந்தியாவின் ஒற்றுமை பாதுகாக்கப்பட வேண்டுமாம்—அதற்காக இந்தி மொழி இந்தியா முழுவதும் ஆதிக்கம் பெற வேண்டுமாம்—பேசியிருக்கிறார், அந்தப் பெரிய இடத்து மனிதர்!

"நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும், உயர்தரக் கல்வி போதிக்கும் மொழியாக இந்தி ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் வட்டாரப் பற்று வளரும்; அது இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆபத்தாக முடியும்.

"இந்தி, அதே நேரத்தில் போதனா மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டால், வட்டார மொழிகள் வேகமாக வளரும் (!)

"இந்தி மொழியை சரளமாகப் பேசவும், எழுதவும் தெரியாத ஒருவருக்கு தனது மாநிலத்திற்கு வெளியில் எதிர்காலத்தில் இடமே கிடையாது,"

—என்று கவர்னரான முன்ஷி குறிப்பிட்டிருக்கிறார்.

'இந்தி மொழி அலுவல் மொழிதான்' என்று ஒருபுறம் பேசித்திரியும் வடநாட்டவர், 'இந்தி, உயர்தரக் கல்வி போதிக்கும் மொழியாகவும் இந்தியா முழுமையிலும் ஆதிக்கம் பெற வேண்டும்' என்று பேசுபவர்களாயும் இருக்கின்றனர்.

இப்படி இவர் பேசிய விழாவினைத் துவக்கி வைத்தவர், பம்பாய் கவர்னரான அரி கிருஷ்ண மெஹ்தாப் ஆவார்.

அணுசக்தி நிறுவனம்

அகில உலக ரீதியில் அமையும்

ஐ. நா.-வில் உடன்பாடு

நியூயார்க், அக். 27—

அகில உலக அணு சக்தி நிறுவனம் ஒன்றை அமைப்பதற்கான உலக மாநாடு ஒன்று கூட்டுவது உள்ளிட்ட மேற்கு நாடுகளின் திட்டத்தை ஐ. நா. பொதுச்சபையின் அரசியல் குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

சோவியத் ரஷ்யாவும் இது பற்றிய தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருக்கிறது. எவரும் தீர்மானத்தை எதிர்க்கவில்லை. ஆறு நாடுகள் மட்டும் நடுநிலை வகித்திருக்கின்றன. எகிப்து, ஈராக், சவூதி அரேபியா, சிரியா, யேமன், லெபனான் ஆகிய நாடுகள்தான் நடுநிலை வகித்தவை.

தீர்மானத்திற்கு ஆதரவாக 53 வாக்குகள் கிடைத்தன.

'சுதந்திர இயக்க' சரிதம்

ஆசிரியர் குழு தலைவர் பதவி நீக்கம்

காங்கிரசாரின் போக்கு காரணம்?

கல்கத்தா, அக். 28—

இந்திய சுதந்திர இயக்கம் பற்றிய ஆதாரபூர்வமான வரலாறு ஒன்றைத் தயாரிப்பதற்காக இந்தியப் பேரரசு நியமித்த மத்திய ஆசிரியர் குழுவின் தலைவரான டாக்டர் ஆர். சி. மஜூம்தார், வரும் நவம்பர் திங்கள் 1-ந் தேதி முதல் தனது பதவியினின்றும் விலகிக் கொள்வதாக அறிவித்திருக்கிறாராம்.

மாநிலக் குழுக்களில் சரித்திராசிரியர் அல்லாதாரைச் சேர்த்துக் கொள்வதற்கு சரித்திர ஆசிரியர்கள் காட்டிவந்த எதிர்ப்பும், சரித்திர ஆசிரியர் அல்லாத உறுப்பினர்கள், சரித்தத்தை ஒரு குறிப்பிட்ட அரசியல் கண்ணோட்டத்துடன் உருவாக்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்ததும்தான் டாக்டர் மஜூம்தாரின் பதவி விலகலுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

மேலும் மத்திய ஆசிரியர் குழாம் தயாரித்த சில பகுதிகளின் நகல், இந்திய சர்க்காருக்குப் பிடிக்கவில்லையாம்.

இந்த நீண்டகால வேறுபாடுகள் தான், கடந்த ஜூன் திங்களில் குழுவையே கலைத்துவிடுவது என்ற முடிவுக்கு இந்தியப் பேரரசைக் கொண்டுவந்தது என்றும், என்றாலும் பின்னர் குழுவின் ஆயுளை இந்த ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதிவரை நீடித்து சர்க்கார் உத்தரவு பிறப்பித்தனர்.

இந்தச் சரித்திரம் எழுதுவதற்குத் தேவையான புள்ளிவிவரங்கள், பல மாநிலங்களில் ஆசிரியர் குழாம் அமைக்கப்பட்ட 1954-ம் ஆண்டிலேயே சேகரிக்கத் துவங்கப்பட்டன.

கோவை தொழிலாளருக்கு 'போனஸ்'

சர்க்கார் அதிகாரி தீர்ப்பு

சென்னை, அக். 28—

கோவையில் உள்ள 40 ஆலைகளில் பணி புரியும் 43,600 தொழிலாளர்களுக்கு ரூ. 50 இலட்சத்திற்குமேல் 'போனஸ்' வழங்குமாறு, விசாரணைக் குழுத் தலைவரான என். எஸ். அருணாசலம் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

சுமார் 5 மாதம் முதல் 15 நாள் சம்பளம் வரையில், பல்வேறு ஆலைத் தொழிலாளர்களுக்கு இந்தத் தீர்ப்புப்படி "போனஸ்" கிடைக்கும்.

1954-ம் ஆண்டிற்கு எவ்வளவு போனஸ் தரப்பட வேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கு கட்டாய 'நடுநிலைக் குழு' ஒன்று சர்க்காரால் நியமிக்கப்பட்டது; ஆனால், குழுவில் உறுப்பினர்களாயிருந்த தொழிலாளர்—முதலாளிகள் பிரதிநிதிகளிடையே உடன்பாடு ஏற்படவில்லை; நேரடியான பேச்சுவார்த்தையும் சமரச முயற்சியும் தோல்வியுறவே, குழுவின் தலைவராயிருந்த அரசாங்க அதிகாரியே 'தீர்ப்பு' வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதிகாரியின் தீர்ப்பின்படி 40 மில்களில் பணியாற்றும் தொழிலாளருக்கு வெவ்வேறு விகிதத்தில் தரப்படும் போனஸ் விவரம் வருமாறு:—

13 மில்களில் 5 மாதம்—ரூபாய்க்கு 0—6—8; 16 மில்களில் 4 மாதம்—ரூபாய்க்கு 0-5-4; 1 மில்லில் 3 மாதம்—ரூபாய்க்கு 0—4—0; 4 மில்களில் 2 மாதம்—ரூபாய்க்கு 0—2—8; 2 மில்களில் 1 மாதம்—ரூபாய்க்கு 0—1—4; 4 மில்களில் ½ மாதம்—ரூபாய்க்கு 0—0—8

தவிர, மீதியுள்ள எல்லா அலவன்சுகளும் சம்பளத்துடன் சேர்த்துத் தரப்படும்.

அதிகாரியின் தீர்ப்பின்படி, முதலாளிகள் போனஸ் வழங்குவதற்கு சர்க்கார் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

1954-ம் ஆண்டில், மூன்று மாதத்துக்குக் குறையாமல் [illegible] 'கொன்வோர்' உட்பட எல்லா வகை மில் சிப்பந்திகளுக்கும் போனஸ் உண்டு; அதே ஆண்டில் பணியாற்றி, இப்பொழுது வேலை இல்லாமலிருப்பவர்களுக்கும் போனஸ் உண்டு.

தென்னாப்பிரிக்க நிலை

அமெரிக்கப் பிரதிநிதி கருத்து

நியூயார்க், அக். 27—

"தென்னாப்பிரிக்காவில் எழுந்துள்ள இன வேறுபாட்டு நிலை மிக நெருக்கடியானது; ஐ. நா.-வுக்கோ அல்லது தென்னாப்பிரிக்காவுக்கோ தீங்கிழைக்காது. ஏதேனும் நன்மை செய்ய நாம் விரும்பினால், நாம் கவலையும், மிகுந்த எச்சரிக்கையும் கொண்டவர்களாக இருக்கவேண்டும்,"

என்று, ஐ. நா. சபைக் கூட்டத்தில், அமெரிக்கப் பிரதிநிதி செனட்டர் இ மெஹ்ரோ தெரிவித்திருக்கிறார்.

ஐ. நா. பேரறிக்கை: பரிசீலிக்க மாநாடு

நியூயார்க் அக். 27—

ஐ. நா. பேரறிக்கையைப் பரிசீலனை செய்வதற்கான மாநாடு ஒன்றை 1957-ம் ஆண்டுக்குப்பின் கூட்ட வேண்டுமென்று, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகள் கோரும் என்று, அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றனவாம்.

ஜினீவா மாநாட்டில் மாற்றுத் திட்டங்கள் நிராகரிப்பு!

வல்லரசுகளின் ஏட்டிக்குப்போட்டி!

ஜினீவா, அக் 28—

இங்கு நடைபெறும் நான்கு வல்லரசு வெளிநாட்டிலாகா மந்திரிகள் மாநாட்டில், மேற்கு நாடுகளும், சோவியத் ரஷ்யாவும் வெவ்வேறு வகையான திட்டங்களை ஐரோப்பிய பாதுகாப்பிற்கு எனக் கூறித் தாக்கல் செய்திருக்கின்றன.

மேற்கு நாடுகள் சார்பில் பிரிட்டிஷ் மந்திரி மாக்மில்லன், ஜெர்மன் ஐக்கியம், ஐரோப்பியப் பாதுகாப்பு இவற்றிற்கான திட்டத்தைத் தாக்கல் செய்தார்.

சோவியத் மந்திரி மாலடோவ், அந்தந்த நாடுகளின் சமூக முறை வேறுபாடுகளைப் பொருட்படுத்தாது, எல்லா ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பிற்கும், அமெரிக்காகூட அதில் இடம் பெறலாம் என்ற வகையில் ஒரு திட்டத்தைத் தாக்கல் செய்தார்.

இந்த ஒப்பந்தப்படி அமையும் நிறுவனங்களில் 'பார்வையாளர்' என்ற முறையில் சீனாவும் இடம் பெறும்—என்பது, ரஷ்ய திட்டமாகும்.

இது, கடந்த ஜூலைத் திங்களில் இங்கு நடைபெற்ற நால்வர் மாநாட்டில் சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின் வெளியிட்ட திட்டத்தைப் போன்றதாகும். அந்தத் திட்டம் இதர மூவரால் நிராகரிக்கப்பட்டது தெரிந்ததே! இப்போதும், மேற்கு வல்லரசுகள் தந்த திட்டத்தை ரஷ்யாவும், ரஷ்யா தாக்கல் செய்த திட்டத்தை மேற்கு வல்லரசுகளும் நிராகரித்து விட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

தேபர் முன் ஆர்ப்பாட்டம்

மைசூர் நகர மண்டபத்தில் காங்கிரஸ் தலைவர் தேபருக்கு வரவேற்பு தரப்பட்டபோது, மண்டபத்திற்கு வெளியே பலர் கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

'மைசூரைக் காப்பாற்றுங்கள்; ஐக்கிய கர்நாடகத்துடன் மைசூரை இணைக்காதீர்கள்,' என்று அவர்கள் குரல் எழுப்பினர்.

'சித்தூர் (கொச்சி) தமிழகத்துடன் இணைய வேண்டும்'

நவ. 9-ல் மாநாடு நடைபெறும்: பல கட்சித் தலைவர்கள் பங்கேற்பர்?

திருச்சூர், அக் 28—

"திரு-கொச்சியின் வடக்கு எல்லையான சித்தூர் தாலுகா தமிழ்நாட்டுடன் இணைய வேண்டும் என்பதற்காகப் போராட்டம் நடத்தப்படும்,"

என்று, சித்தூர் தாலுகா தமிழக இணைப்புக் குழுவின் துணைச் செயலாளரான என. ஆர். தங்கன் தெரிவித்திருக்கிறார்.

'கலாச்சார, பூகோள ரீதியாக சித்தூர் மக்கள், கேரள மக்களைவிட தமிழக மக்களுடன்தான் அதிகமான தொடர்பு உடையவர்கள்,"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கொழிஞ்சம்பாறையில், நவம்பர் 9-ந் தேதியன்று இதற்காக ஒரு மாநாடு நடைபெறும் என்றும், பல கட்சித் தலைவர்களும் அதில் கலந்து கொள்ள வாக்களித்திருக்கிறார்கள் என்றும் அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 29—10—'55 சனி

சிவப்பு விளக்கு!

★

ஊர்க்கோடியிலே, ஒதுக்குப்புறத்திலே, சதுப்பு நிலத்திலேதான் சேரிகள் அமைய வேண்டும்; அங்குதான் தீண்டப்படாதவர்கள் வாழ வேண்டும் என்று தாழ்த்தப்பட்ட மக்களை ஒதுக்கி வைத்திருந்தால்தான், தங்களுக்கு சமுதாயத்திலே கிடைத்திருக்கிற உழைக்காமல் வாழும் உல்லாசமும், 'உயர்ந்தோர்' என்ற கவுரவமும் பாதுகாக்கப்பட முடியும்—என்று, இந்த நாட்டிலுள்ள பார்ப்பனர்கள், மக்களில் ஒரு பகுதியினரை ஒதுக்கி வைத்திருக்கவில்லையா? அது போலத்தான். தென்னாப்பிரிக்க நாட்டில் குடியேறிய வெள்ளையரும், அங்குள்ள சுதேசி மக்களையும், இதர வெள்ளையரல்லாத மக்களையும்—தனித்தனி இடங்களில்தான் அவர்கள் வாழ வேண்டும்; தங்களுடன் சேர்ந்து வாழக் கூடாது—என்று, இன ஒதுக்கல் செய்கின்றனர்—தங்களின் ஆதிக்கத்திற்குப் பாதுகாப்பு தேடிக் கொள்வதற்காக!

'இந்த இன ஒதுக்கல் மனித இன உரிமைகளுக்கு முரண்பட்டது' என்பதை, நல்லோர் அனைவரும் ஒப்பியிருக்கின்றனர்.

ஐ. நா. சபை, தென்னாப்பிரிக்க வெள்ளையரின் இன வெறியைக் கண்டித்து, 'இந்த இன ஒதுக்கல், ஐ. நா. நிறுவன பேரறிக்கையின் அடிப்படைக் கொள்கைக்கே விரோதமான செயலாகும்' என்று கூறிவருகிறது.

ஐ. நா. சபையின் எச்சரிக்கையையும், நல்லுபதேசத்தையும், தென்னாப்பிரிக்க வெள்ளை சர்க்கார் மதித்ததாகக்காணோம்.

ஒரு இனத்தவரை இப்படிக் கொடுமைப்படுத்துவது, தனது உள்நாட்டு விவகாரம்—என்று கூறி, ஐ. நா. அவையிலிருந்தே வெளியேறிச் சென்றுவிடுகிற துணிவை, மேற்கத்திய நாடுகளின் பின்னணி பலத்தால்தான் தென்னாப்பிரிக்க சர்க்கார் பெற்றிருக்கிறது—என்பதை மறுப்பது, சுலபத்தில் முடியக் கூடியதல்ல!

கடந்த 1952-ல், தென்னாப்பிரிக்க இன ஒதுக்கல் நிலைபற்றி ஆராய்வதற்காக ஐ. நா. நியமித்த விசாரணை குழுவின் தலைவரான டாக்டர் ஹெர்மன் சாந்தா க்ரூஸ், சிலநாட்களுக்கு முன்பு ஐ. நா. அரசியல் குழுக் கூட்டத்தில் பேசுகையில், 'தென்னாப்பிரிக்க வெள்ளையரின் நிறவெறி அவர்களுக்கே ஆபத்தானதாக முடியும்' என்று எச்சரிக்கை செய்திருக்கிறார். 'தொடர்ந்து, வெள்ளையர், இன ஒதுக்கலைக் கடைபிடிப்பரேல், வெள்ளையரல்லாத பெரும்பான்மையினர் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள பலாத்காரத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழி இராது,' என்றும் அவர் பகிரங்கமாகவே தெரிவித்திருக்கிறார்.

குடியேறிய சிறுபான்மையினர், தாங்கள் பெற்றுவிட்ட ஆதிக்கத்தை என்றென்றைக்கும் நிலை நாட்டிக்கொள்ள, மிகக் கேவலமான முறைகளையும் கைக்கொண்டு, குடியேறிய நாட்டுக்குரிய பெரும்பான்மையினரைக் கொடுமைப்படுத்துவதை உலகெங்கணுமுள்ள நாகரிக உள்ளம் கொண்டோர் கண்டிக்கின்றனர்.

ஆனாலும், எந்த ஒரு நல்லுரையும், கடும் கண்டனமும், தென்னாப்பிரிக்க வெள்ளையருக்கு நியாயத்தை உணர்த்தக் காணோம்! அவர்கள், தங்களின் அழிவுப் பாதையில் வேகமாக நடைபோட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆப்பிரிக்காவில் சில காலனிகளை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் பிரிட்டானியரும், 'நீக்ரோ மத குரு பூசை செய்வதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்' என்று கூறிடுவோர் பலராக இல்லாவிடினும் சிலரையேனும் கொண்டிருக்கிற அமெரிக்கரும், தென்னாப்பிரிக்க வெள்ளையரின் நிறவெறியைக் கண்டிக்க முடியாதவர்களாயிருக்கின்றனர் — பல சொந்தக் காரணங்களுக்காக—சுயநலத்திற்காக!

ஐ. நா. விசாரணைக் குழுத் தலைவர் எச்சரித்திருப்பதைப் போல், ஆப்பிரிக்க சுதேசி மக்கள் பலாத்காரத்தில் இறங்கினால், அப்போதும், இந்த வாய்மூடி மௌனிகள் வாளாவிருப்பரா என்றால், அதுதான் இல்லை; 'ஆப்பிரிக்க மக்கள் போக்கு உலக சமாதானத்திற்கே உலைவைப்பதால் இருக்கிறது,' என்று கூச்சல் எழுப்புவர்!

உலகெங்கணுமுள்ள நல்லெண்ணம் படைத்தோரின் அனுதாபத்தையும், எல்லா வகையான நியாயங்களையும் தங்கள்பால் கொண்டு, 'எங்களை மனிதர்களாக மதித்து நடக்கவேண்டும்; எங்கள் உரிமைகள் எங்களுக்குவேண்டும்,' என்று தென்னாப்பிரிக்க மக்கள் அமைதியாகக் கோரி வருகின்றனர்.

அந்தக் கோரிக்கையை துச்சமென மதித்து, தங்களிடமுள்ள அதிகார பலத்தை நம்பி ஆதிக்கம் செலுத்த நினைக்கின்றனர் வெள்ளையர். 'இது ஆபத்து—ஆகாது'—என்ற 'சிவப்பு விளக்கு'கள் காட்டப்பட்டுவிட்டன. முடிவு, என்னவாகும் என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அறம் வெல்லும்; அநியாயம் அழியும்; நீதி நிலைக்கும்; அநீதி, ஆழக் குழி தோண்டிப் புதைக்கப்படும்.

பிறரைத் தன்னைப்போல மதிக்காதவர்கள்—தனி மனிதர்களோ அல்லது ஒரு கூட்டமான இனத்தவரோ—எப்படியானாலும், அவர்கள் தொடர்ந்து நடமாட அனுமதிக்கப்பட்டதில்லை — புத்தி கற்பிக்கப்படாமல்!

புதிய மாநிலங்கள் அமைப்பு

முதலமைச்சர்கள் மாநாடு—ஒரு கண்ணோட்டம்

புதுடில்லி, அக். 29—

புதிய மாநிலங்கள் அமைப்பு, பொதுத் தேர்தல்கள் ஆகியவை பற்றி முதல் மந்திரிகள் மாநாட்டில் செய்யப்பட்டுள்ள முடிவுகள் பற்றி சில விவரங்கள் வெளியாகியுள்ளன.

புதிய மாநில சட்ட சபைகளும், மக்கள் சபையும் 1957 மார்ச்சில் கூடுமென்று தெரிகிறது.

1957 பிப்ரவரி மாதம் முழுமையும் தேர்தல்கள் நடைபெறும். மார்ச் 7-ந் தேதிக்குள் நாடெங்கிலும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கும்.

மாநிலக் குழுவின் சிபாரிசுகள் பற்றி 1956 ஜனவரி முதல் வாரத்தில் இந்திய சர்க்கார் தமது முடிவை அறிவிப்பார்கள்.

புதிய மாநில அமைப்பு நகல் மசோதா ஜனவரியில் எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்படும் பிப்ரவரி இரண்டாவது வாரத்திற்குள் எல்லா மாநிலங்களும் தமது கருத்தை அனுப்பிவிட வேண்டும். மக்கள் சபையின் வரவு - செலவு கூட்டத்தில், மசோதா நிறைவேற்றப்படும்.

1956 ஜூன் முதல் செப்டம்பர் வரை எல்லை நிர்ணயம், சொத்து, பொறுப்புகள் பங்கீடு, அதிகாரிகள் ஒதுக்கல் ஆகிய வேலைகள் நடைபெறும்.

நகல் மசோதா கிடைத்த ஒரு மாதத்திற்குள் தங்களுடைய கருத்துக்களை அனுப்பிவிடுவதாக முதல் மந்திரிகள் வாக்களித்துள்ளனராம்.

இதை முன்னிட்டு, அரசியல் அமைப்பின் 3-வது ஷரத்தை திருத்த வேண்டுமென்ற யோசனை கைவிடப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

அது எங்கோ?

மீன் பிடிப்பு துறைமுகங்கள் கட்டப்படுமாம்!

கடலில் மீன் பிடிப்பதற்கு இயந்திர விசைப் படகுகள் மேலும் அதிக அளவில் உபயோகிக்கப்படக் கூடுமென்று தோன்றுவது காரணமாக, கரையோரங்களில் மீன் பிடிப்புத் துறைமுகங்களை அமைப்பது பற்றி இந்திய சர்க்கார் ஆலோசித்து வருகின்றனராம்.

இந்தத் துறைமுகங்கள், இயந்திர விசைப் படகுகளை நிறுத்தி வைப்பதற்கும், எரிபொருளை நிரப்பிக் கொள்வதற்கும், பழுது பார்ப்பதற்கும் போதிய வசதிகள் கொண்டவையாக இருக்கும். கடலில் பிடித்த மீன்களைக் கரையில் சேமித்து வைப்பதற்கும், பக்குவப் படுத்துவதற்கும், வேண்டிய வசதிகளைச் செய்வதற்கும் துறைமுகங்களைச் சுற்றியுள்ள பிரதேசங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

ஐதராபாத்தில் நிலச் சீர்திருத்தம்

ஐதராபாத் குடிவார விவசாய நிலச் சட்டத்தின்கீழ் பாதுகாப்புப் பெற்றுவரும் விவசாயிகள், இப்போது தாங்கள் விவசாயம் செய்து வரும் நிலங்களுக்கு, வரும் நவம்பர் முதல் தேதியிலிருந்து தாங்களே சொந்தக்காரர்களாக்கப்படுகின்றனர்.

'ஜனநாயக வழிகளில் நில விநியோகத்தை அமைதியாகச் செய்து முடித்திருப்பது, இந்தியாவிலேயே ஐதராபாத் மாநிலம்தான் முதலாவதாகும்' என்று கூறப்படுகிறது.

நிலச் சீர்திருத்த சகாப்தத்தில் இந்த நாளின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் உணர்ந்து, மாவட்டம் முழுவதும் பொது விடுமுறை நாளாகப் பிரகடனம் செய்து, ம்மாமெத் மாவட்ட நிர்வாக அதிகாரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தியப் பேரரசின் பிரித்தாளும் சூழ்ச்சி!

ஏகாதிபத்தியப் போக்குத்தானே?

சென்னைக் கூட்டத்தில் சம்பத் இடித்துரை

"இன்று, டில்லி ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் வடநாட்டுக்காரர்கள், வெள்ளைக்காரர்கள் மேற்கொண்டிருந்த ஏகாதிபத்திய முறைகளைக் கூட்டாமல் குறைக்காமல், அப்படியே பேணி வளர்த்து வருகிறார்கள்.

"'சைமன் கமிஷன்' வருகிறது—அறிக்கை தரவிருக்கிறது—என்றால், உடனே வெள்ளையர், இராணுவத்தினருக்கு உஷார்படுத்தும் உத்தரவு அனுப்புவர்; துப்பாக்கிகளைத் துடைத்துக் கொள்ளுமாறு கட்டளையிடுவர்—'கமிஷனின்' அறிக்கை கண்டு எவரேனும் கொதித்தெழுந்தால், அவர்கள்மீது இராணுவத்தை ஏவி அவர்களை அடக்கி ஒடுக்குவதற்காக!

"அதேபோலத்தான், மாநிலப் புனரமைப்புக் குழுவினர் தங்கள் அறிக்கையைத் தாக்கல் செய்கின்றனர் என்றால், உடனே இந்திய சர்க்கார், எல்லா மாநில சர்க்கார்களுக்கும் தாக்கீது அனுப்புகின்றனர்; 'போலீசாரைத் தயாராக இருக்கச் செய்யுங்கள்—கிளர்ச்சி எழும்போது போலீசாரால் அடக்க முடியாது என்று தெரிந்தால், நாங்கள், தூங்கிக்கொண்டிருக்கும் இராணுவத்தினரை எழுப்பி அனுப்பிவைக்கிறோம்'—என்று கூறுகின்றனர்; இராணுவத்தினரை உஷார்படுத்துகின்றனர்.

"நாட்டிலே எழுகிற சிக்கலுக்குப் பரிகாரம் தேட என்று கூறித்தான், தொடர்புடைய துறைகளில் நிபுணர்களாயிருப்போரை அழைத்து, விசாரணை செய்து தீர்ப்பு வழங்குமாறு கூறுவார்கள்—வெளிநாடுகளில்; அந்த நிபுணர் குழுவின் அறிக்கையை நாட்டு மக்கள் மட்டுமின்றி, சர்க்காரும் எதிர்பார்ப்பார்கள்—அங்கெல்லாம்!

"ஆனால், இங்கு, எந்தக் குழுவின் சிபாரிசு குறித்து சர்க்கார் கவலையுடன், ஆவலை வெளிக்காட்டினார்கள்? இல்லையே!

"ஆச்சாரியார், தனது கல்வித் திட்டம் குறித்து விசாரணை செய்வதற்கு, பாருலேகர் என்பவர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தார்; அந்தக் குழுவினரும் தங்களின் சிபாரிசுகளை வெளியிட்டனர்; அவை, 'ஆச்சாரியாரின் குலதர்மக் கல்வித் திட்டம், நூற்றுக்கு நூறு சரியானது' என்று கூறி, 'கல்வி என்றால் படிப்பே இருக்கக் கூடாது—பாய் முடைவதும், பானை செய்வதும்தான்'—என்றிருந்தன.

"பின்னர்—அந்தத் திட்டத்தை ஒழிப்பதையே தனது மந்திரி சபை அமைப்பிற்குக் 'கால்கோல் விழா' நடத்துவதாகும்—என்று கூறி, இப்போதைய காமராசர் சர்க்கார் பதவிக்கு வந்தது.

"இவர்களும், கல்வி பற்றி ஆராய, டாக்டர் அழகப்ப செட்டியார் தலைமையில் ஒரு குழுவை நியமித்தனர்; அந்தக் குழுவும், தனது சிபாரிசுகளை தாக்கல் செய்துள்ளது; இவர்கள், 'இப்போதுள்ள சர்க்கார் அமுல் செய்துவரும் கல்விதான், கல்வியாகும்; குழந்தைகளுக்குத் தொழில் செய்யக் கற்றுத் தருவதென்பது கூடவே கூடாது'—என்று கூறியிருக்கின்றனர்.

"இப்படி ஆட்சியில் அமர்ந்திருக்கும் சர்க்காருக்குச் சாதகமாகவேதான் குழுக்கள் சிபாரிசு செய்கின்றனவே தவிர, சிக்கல்களை நுணுகி ஆராய்ந்து, 'அவற்றிற்குப் பரிகாரம் உண்மையிலேயே இதுதான்' என்று எவர்தெரிவிக்கின்றனர்?

"சர்க்கார்தான், குழுவை நியமிக்கும் உத்தரவிலேயே, பென்சிலால் குறிப்பெழுதித் தருகின்றனரே—'இன்னின்ன செய்யவேண்டும்'—என்று! அவ்வாறிருக்க, இந்தக் குழுவினரெல்லாம், சிக்கல்களுக்கு எப்படிப் பரிகாரம் தேடித் தரப் போகின்றனர்?

"மாநில எல்லைகளை எல்லாம் மொழிவாரியாகத் திருத்தி அமைக்க வேண்டும் என்பது மக்களின் விருப்பம். இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கும் காங்கிரசார்தான், மக்களுக்கு இந்த விருப்பத்தையும் ஊட்டியவர்கள்; ஆனால், இன்று நடந்தது என்ன? 'மொழிவழி மாநிலங்கள்தான் இந்தியாவில் ஒற்றுமையை வளர்க்கும்' என்று ஒருகாலத்தில் கூறியவர்கள், இன்று, 'மொழிவழி மாநிலம் இந்தியாவின் ஒற்றுமையைக் குலைக்கும்' என்று பேச முற்பட்டிருக்கிறார்கள்.

"தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள, ஆட்சியாளர் நியமித்த மாநிலக் குழுவினர் என்ன தீர்ப்பு வழங்கியிருக்கின்றனர் என்பதை நாடு நன்கு அறியும். இந்தச் சிபாரிசுகளால் பாதகமடைந்திருப்போர் எதிர்ப்புக் குரல் எழுப்பினால், இராணுவத்தைக் காட்டி மிரட்டுகின்றனர்.

"இருநூறு கோடி ரூபாய் தீனி போட்டு இவர்கள், எதற்காகத்தான் இராணுவம் வைத்திருக்கிறார்கள்—மக்கள்மீது ஏவுவதற்கு அல்லாது வேறு எதற்காகத்தான்? இது, வெள்ளையர் கையாண்ட ஏகாதிபத்தியப் போக்கல்லவா?

"இப்படி இந்தியப் பேரரசின் ஒவ்வொரு நடவடிக்கையிலும், 'ஏகாதிபத்திய வாடை' வீசுவதைக் காண்கிறோம்.

"அந்தக் காலத்தில், இந்திய மக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியை வெள்ளையர் கைக்கொண்டிருப்பதாக, காங்கிரஸ் நண்பர்கள் தெரிவித்து வந்தனர்; இன்றுள்ள நிலைமை?

"இராணுவத்தில்—தமிழ் நாட்டு வீரர்களடங்கிய பிரிவு பம்பாயிலும், ஆமதாபாத்திலும், டில்லியிலும் வைக்கப்பட்டிருக்கிறது; மராத்தியர் அடங்கிய பகுதி—அசாமில்; சீக்கியர் அடங்கிய பகுதி—கர்நாடகத்தில்; வங்காளிகள் அடங்கிய

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

சென்னையில் மதுவிலக்கு அமுல்

சரிவர நடைபெற ஐந்து சிபாரிசுகள்

சில குற்றங்களுக்கு ஜாமீன் விடுதலை கிடையாது?

இந்திய சர்க்கார் நியமித்த மதுவிலக்கு விசாரணைக் குழுவின் சிபாரிசுகள் முன்னரே வெளிவந்துள்ளது. சென்னை மாநிலம் சம்பந்தமாகக் குழுவினரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் இங்கு தரப்படுகின்றன:—

"பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தில், மதுவிலக்கு, பிரதேச வாரியாக 3 கட்டங்களில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. 1946 அக். முதல் தேதியிலிருந்து 8 மாவட்டங்களிலும், 1947-ல் மேலும் 8 மாவட்டங்களிலும், 1948 அக் 2-ந் தேதிமுதல் பாக்கியுள்ள 9 மாவட்டங்களிலும் மதுவிலக்குக் கொண்டுவரப்பட்டது

"மது கலந்த பானங்கள், தீமை விளைவிக்கும் மருந்துகள் அனைத்தும் மதுவிலக்குச் சட்டம் பொருந்தும் கள் இறக்குவதும் தடை செய்யப்பட்டது. குடிப்பதற்கோ அல்லது வெல்லம் தயாரிப்பதற்கோ 'பதனீர்' வடிக்க அனுமதிப் தற்கு கலெக்டர்களுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 'பதனீர்' வைத்திருக்கவும், எடுத்துச் செல்லவும் விற்கவும் அனுமதிக்கப்படுகிறது.

யாருக்கு விதிவிலக்கு?

கீழ்க்கண்ட காரியங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது:—

(அ) வைத்திய, விஞ்ஞான, ஆலைத் தொழில் போன்ற காரியங்களுக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட வகை மது அல்லது போதை தரும் மருந்தின் உபயோகம்.

(ஆ) சில நிபந்தனைகளின்மீது பழங்கால வழக்கங்களை அனுசரித்து உண்மையான மதச் சடங்குக்காக மது வைத்திருப்பது; உபயோகிப்பது

(இ) மதுவிலக்குப் பிரதேசத்தின் வழியாகச் செல்லும் உண்மையான யாத்திரீகர்களின் உபயோகம்.

(ஈ) இராணுவத்தினரின் உபயோகம்.

இந்தியரல்லாதார் குறைந்த அளவில் அந்நிய மது உபயோகிக்க 'பெர்மிட்'டுகள் வழங்கப்படுகின்றன. டாக்டர்களின் சிபாரிசின் பேரில் இந்தியர்களுக்கும் 'பெர்மிட்டு'கள் வழங்கப்படுகின்றன; ஆனால், அதிகபட்சமாக அந்நியருக்கு வழங்கப்படுவதில் பாதி அளவுதான் இந்தியருக்கு அனுமதிக்கப்படுகிறது.

வைத்தியத் துறையில் மட்டுமே கஞ்சா உபயோகிக்கப்படுகிறது. பதிவு செய்துகொண்ட 'அபினி பழக்கமானவர்களுக்கு' மட்டும் அபினி அனுமதிக்கப்படுகிறது. 1949 அக். முதல், வருடத்தில் ஐந்தில் ஒரு பங்கு வீதம் அபினியின் அளவு குறைக்கப்பட்டு வந்துள்ளது. 1953 செப்டம்பர் முடிவுடன் அபினி உபயோகம் அறவே நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்; உடல் நலனை முன்னிட்டு பழக்கமானவர்களுக்கு சொற்ப அளவில் அபினி அனுமதிக்கப்படுகிறது.

கலால் வருமானம்— காரணம் என்ன?

சென்ற போருக்கு முன், நிலவரிக்கு அடுத்தபடியாக அதிக வருமானம் கலால் வரிமூலம்தான் சர்க்காருக்கு கிடைத்தது. அதாவது, கலால் வருமானம் 2-வது இடம் பெற்றது. 1938-39ல் ரூ. $8\frac{3}{4}$ கோடியாக இருந்த கலால் வருமானம் 1945-46ல் ரூ. $12\frac{1}{4}$ கோடியாக அதிகரித்தது—அதாவது, போருக்கு முன்பிருந்ததைவிட சுமார் $3\frac{1}{2}$ மடங்கு அதிகம்.

இப்போது கலால் வருமானம் சென்னை, ஆந்திரா இரண்டுக்குமாகச் சேர்ந்து ரூ 32 லட்சத்துக்கும் குறைவு

மது கலந்த மருந்துகள், அலங்காரப் பொருட்களுக்கு விதிக்கப்படும் வரி, 'பெர்மிட்' வைத்திருப்பவர்களுக்கு விற்கப்படும் அந்நிய மதுவின் விற்பனை வரி, மதுவிலக்குக் குற்றங்கள் சம்பந்தமான அபராதங்கள், பறிமுதல்கள் ஆகியனவே முக்கியமாகத்தற்போதைய கலால் வருமானத்துக்கு காரணம்.

குழுவினரிடம் சென்னை சர்க்கார் கூறியது என்ன?

பழைய குடிகாரர்களில் மிகச் சிலர் தவிர, பெரும்பாலோர் குடிப்பழக்கத்தைவிட்டுவிட்டனர்என்று, சென்னை சர்க்கார் கருதுகிறது.

25 இலட்சம் குடியர்களில், 25 சதவிகிதம் பேரைத்தான் திருத்த வேண்டும்-என்று சென்னை கூறியுள்ளது.

30 சதவிகிதம் பேரைத் திருத்த வேண்டியிருப்பதாக பம்பாய் கூறுகிறது.

குடி பெரிய பிரச்சினையாக இல்லையென்றும், குடிகாரர்களில் பெரும்பாலோர் அப்பழக்கத்தை விட்டுவிட்டனர் என்றும் சௌராஷ்டிர சர்க்கார் தெரிவிக்கிறது

சாராயம், கள், கஞ்சா உபயோகம் பெரும் அளவுக்குக் குறைந்துவிட்டதாக ஆந்திர சர்க்காரும் தெரிவித்துள்ளது.

நிர்வாகி ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமாம்!

1956 ஏப்ரல் முதல் ஒவ்வொரு மாநிலத்திலும் மதுவிலக்கு நிர்வாகி ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென குழு சிபாரிசு செய்கிறது.

மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள ஒரு பிரமுகர் (அதிகாரியல்லாதவர்) நிர்வாகியாக இருக்க வேண்டும்; அவர் முற்றிலும் மதுவிலக்குக்கே தம்மை அர்ப்பணிப்பவராக இருக்க வேண்டும் அவர் மதுவிலக்கு மந்திரியின்கீழ்—அவரது நேர்மேற்பார்வையில் பணியாற்ற வேண்டும்.

போலீஸ் இலாகாவின் வழக்கமான நிர்வாகத்தில் தலையிட நிர்வாகிக்கு அதிகாரம் ஏதுமிருக்காதென குழு தெளிவுபடுத்த விரும்புகிறது. எனினும், மதுவிலக்கு அமுல் பிரச்சினைகளில்—குறிப்பாக இத்துறையில்—அதிகாரிகள், அதிகாரச சார்பற்றவர்களின் நடவடிக்கைகளை இணைத்து நடத்த நிர்வாகிக்கு அதிகாரச் எல்லை உண்டு

நிர்வாகிக்கு உதவுவதற்கு மாநில மதுவிலக்கு போர்டு ஒன்று இருக்க வேண்டும்.

தண்டனைகள்

ஏற்கனவே உள்ள மதுவிலக்குச் சட்டத்திலும், விதி முறையிலும் கீழ்க்கண்ட மாறுதல்களைச் செய்வதற்கு குழு சிபாரிசு செய்திருக்கிறது:—

(1) கள்ளத்தனமாக மது இறக்குதல்; மது, மருந்துவகைகளின் இறக்குமதி-ஏற்றுமதி; விற்பனைக்காக புட்டிகளில் மதுவை அடைத்தல்; எரி சாராயத்தைப் புளிக்க வைத்தல்; ஒருவகை சணல் (ஹெம்ப்) சாகுபடி—முதலிய குற்றங்களுக்கு ஜாமீன் விடுதலை கூடாது.

(2) ஜாமீன் இல்லாத குற்றங்கள் சம்பந்தமான தண்டனைகள் கடுமையாக இருக்க வேண்டும் குறைந்தபட்சத் தண்டனையை சட்டத்திலேயே நிர்ணயிக்கப்பட வேண்டும்—உதாரணமாக, முதல் குற்றத்துக்கு 6 மாதம் சிறையும் கடும் அபராதமும், 2-வது தடவை குற்றம் செய்தால் குறைந்தபட்சம் ஓராண்டு சிறையும், இன்னும் கடுமையான அபராதமும் விதிக்கப்படலாம்.

தென்னாப்பிரிக்க சர்க்காரின் அநியாய சட்டங்களை எதிர்த்து யூனியன் சர்க்கார் காரியாலயத்திற்கு முன் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான ஆப்பிரிக்கரோடு, இந்திய மாதரும் கலந்து கொண்டனர்.

சேரிகள் சீரமைப்பு வேலைகளில் சிறைக் கைதிகள் ஈடுபடுத்தப்படுவர்

சென்னை சர்க்கார் பரிசீலனை

சென்னை, அக். 28—

இம்மாநிலத்தில், கடுங்காவல் தண்டனை பெற்றுள்ள சிறைக் கைதிகளை, கிராம அபிவிருத்தி போன்ற வெளி வேலைகளிலும், சேரிகள் சீரமைப்பு, அரிசனங்களுக்கு வீடு கட்டித் தருதல் போன்ற வேலைகளில் ஈடுபடுத்தலாமா என்பது பற்றி, சென்னை சர்க்கார் பரிசீலனை செய்து வருகின்றனர்.

இந்தத் திட்டத்தின்மீது, சிறையிலுள்ள 100 கைதிகள், சென்னை மிருகக் காட்சிசாலையின் நூற்றாண்டு விழாவையொட்டிய வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வேலை செய்யக்கூடியவர்களாக சென்னை சிறையில் மட்டும் 1,700 பேர் இருக்கின்றனராம்.

மற்ற சிறைகளிலுள்ள கைதிகளையும் இதுபோன்ற வேலைகளுக்குப் பயன்படுத்தலாமா என்பது பற்றி சிறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் கவனித்து வருகிறாராம்.

கைதிகளுக்கு வேலைசெய்யும் வாய்ப்புகள் கிடைப்பதுடன், அவர்கள் பெறும் தினசரி ஊதியத்தின் மூலம் சிறை வருமானம் அதிகரிக்கக்கூடும்.

கைதிகளைப் பயன்படுத்தி ரூ. 10,000 செலவில், செங்கல்பட்டில் வீடுகள் கட்டுவதற்கும் முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரிகிறது.

செய்திச் சுருள்

★

திருவனந்தபுரம் தி. மா. மு. கழகம்

முதல் ஆண்டு விழா

23—10—55 மாலை 4 மணிக்கு திருவனந்தபுரம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் ஆண்டு விழா, திருவனந்தபுரம் ஆண்டாள் லாட்ஜ் திடலில், 'கேரள கௌமதி' ஆசிரியர் வேணாட்டு கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் ஆண்டு அறிக்கை வாசித்த பின், திருச்சி நகர தி மு. கழக செயலாளர் தோழர் எம்.எஸ். மணி, இன்றைய நிலை குறித்தும், மாணவர் கழகம் ஆற்ற வேண்டிய பணி குறித்தும் பேசினார்.

• • •

நிர்வாகிகள் தேர்தல்

அன்று இரவு 9 மணிக்கு தோழர் பி. சங்கர் தலைமையிலும், திருச்சி தோழர் எம். எஸ் மணி முன்னிலையிலும் மாணவர் கழகத் தேர்தல் நடைபெற்றபோது, தோழர்கள் என். எஸ். மணி செயலாளராகவும், இரா. ஜெயராம் துணைச் செயலாளராகவும், குமாரசாமி பொருளாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் பலவேசம், ஜெயராம், இக. அன்பரசு, என். எஸ் மணி, தி வி. திருமாறன், பன்னீர்செல்வம், பி எஸ். மணி, குமாரசாமி, இராமலிங்கம் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இறுதியாக தோழர் எம். எஸ். மணி அவர்கள், மாணவர் கழகம் செயல்பட வேண்டிய முறை பற்றி பேசினார்.

சென்னை—செம்பியம் சுகாதார மன்றம்

23—10—55 காலை 9 மணியளவில், சென்னை மறைமலையடிகள் நூல் நிலையத்தின் ஆதரவில் 20-வது வட்டத்திலுள்ள பல இறைவணக்களைக்கொண்ட கூட்டம் ஒன்றில், செம்பியம் சுகாதார மன்றம் ஒன்று நிறுவப்பட்டு, தோழர்கள் ச மாணிக்கம், எஸ் ஈ சுப்பிரமணியம், மு தங்கமணி, (தி.மு.க.) ஆகியோர் முறையே செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளராகக்கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

முத்துக்கிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்றம்

கடையநல்லூர் முத்துக்கிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்றச் செயற்குழுக் கூட்டம், தோழர் ப. புகழேந்தி தலைமையில் நடைபெற்றபோது, விரைவில் மன்றச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், புது மாகாண அமைப்புக் குழு முடிவு பற்றிய தி மு கழகப் பொதுச்செயலாளரின் அறிக்கையை வரவேற்றும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருக்குறள் ஆராய்ச்சிக் கட்டுரைப் பகுதி

குறட் பாக்களை ஆராய்ச்சிக் கண்கொண்டு கற்பதற்கு ஊக்கம் தரும் பொருட்டு உறையூர் திருக்குறள் சிந்தனைக் குழுவினர் 'திருக்குறள் ஆராய்ச்சிக் கட்டுரைப் பரிசுத் திட்டம்' ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். தமிழ் வளர்ச்சியில் பற்றுக்கொண்ட அனைவரும் இத்திட்டத்தில் பங்கு கொள்ளலாம் என்றும், பங்கு பெறுவோர் திருக்குறள் பற்றிய எப்பொருள் பற்றியேனும் கட்டுரை எழுதலாமென்றும், ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதலாம் என்றும், பரிசுக்கென அனுப்பப்படும் கட்டுரைகளை நூல் வடிவில் வெளியிடும் உரிமை குழுவினருக்கு மட்டுமே உண்டென்றும், கட்டுரைகள் அனைத்தும் 14—1—56க்குள் அனுப்பப்பட வேண்டும் என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

முகவரி:— 'தலைவர், திருக்குறள் சிந்தனைக் குழு; ஏ—7, தில்லைநகர், உறையூர்—திருச்சி.

மாச்சம்பாளையம் இராமு நினைவு இரவுப் பள்ளி

மாச்சம்பாளையம் கிளைக் கழக உறுப்பினர் தோழர் மா. வீ. இராமசாமி இயற்கை எய்தியமை குறித்து கிளைக் கழகம் அனுதாபம் தெரிவித்தது. அவர் நினைவாக 'இராமு நினைவு இரவுப் பள்ளி' ஒன்று, 19—10—55 இரவு 8 மணிக்கு துவக்கிவைக்கப்பட்டது. தோழர் ரங்கநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். கு மருதப்பன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் தோழர் க கிருட்டிணசாமி இராமுவின் புகைப்படத்தையும், பெயர்ப் பலகையையும் திறந்து வைத்தார் தோழர்கள் கு. கருப்புசாமி, மயில்சாமி, இரணியன், க. மயில்சாமி ஆகியோர் தோழர் இராமுவின் சிறந்த தொண்டு குறித்துப் பேசினர்.

ஆரம்பப் பள்ளி துவக்கம்

சென்னை—நுங்கம்பாக்கம் சமூக நல மன்ற ஆதரவில் ஏழை தாழ்த்தப்பட்ட சிறுவர்களின் முன்னேற்றத்தை ஒங்கச் செய்ய எண்ணி, 'சாந்த நிகேதன்' என்ற ஆரம்பப் பள்ளியை, திரு. டி. விநாயகம் அவர்களால் தொடங்கப்பெற்று, 10, குமரப்ப முதலி தெரு, நுங்கம்பாக்கத்தில், திரு வி பழனிவேல் அவர்களால் 10 மாணவ, மாணவிகளுடன் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அன்பளிப்பு

இலங்கை (திரிகோணமலை) தோழர் எஸ். எச். சதகதுல்லா அவர்களால் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

டாக்டர் தருமாம்பாள்

அம்மையார் பிறந்த நாள் விழா

சென்னை, அக். 26—

நேற்று பிற்பகல் 4-30 மணிக்கு மாணவர் மன்றத் தலைவரும், சென்னைப் பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகத் தலைவருமாகிய டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் பிறந்ததின விழா, அவர்கள் இல்லத்தில் கொண்டாடப்பட்டது. மாணவர் மன்றம், தாய்மார் கழகம் ஆகியவற்றின் சார்பில், மன்ற நிலையங்களிலிருந்து ஆணும், பெண்ணும் அணிவகுத்து, அம்மையார் இல்லத்துக்கு வரிசைகள் எடுத்துச் செல்லப்பட்டனர். பல கழகங்களின் சார்பில் அம்மையாருக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. வெளியூரிலிருந்து வந்த பல வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. மயிலை – சிவமுத்து அவர்கள் அம்மையாருக்குவாழ்த்து கூறி பாராட்டிப் பேசினார். குழந்தைகளின் ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

டாக்டர் அம்மையார் அவர்கள், தமக்குச் செய்த சிறப்புகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார். தோழியர் தாமரைக்கண்ணி அம்மையார் நன்றி கூறினார்.

பாராட்டுக் கூட்டமும் தேநீர் விருந்தும்

15—10—55ல் அரக்கோணம் தி. மு. கழகத் தோழர் எ. இராமச்சந்திரன், விதவையான தோழியர் மோகனாம்பாளை கலப்புத் திருமணம் செய்துகொண்டதை முன்னிட்டு அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டமும், தேநீர் விருந்தும், அரக்கோணம் நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் க. கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்றது. மணமக்களின் துணிவைப் பாராட்டி பல தோழர்கள் பேசினர். இறுதியில் மணமகன் பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

நன்றியறிவிப்பு

21—10—55-ல், திருப்பரங்குன்றம் தோழர் நடராசன்—தோழியர் ஜெகஜோதி திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு பரிசுகளும், வாழ்த்துச் செய்திகளும் அனுப்பிய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மணமகன் சகோதரர் தோழர் சி ம. வாழவந்தான் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறார். இதன் நினைவாக, 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

திருமணங்கள்

21-10-55ல், ம. புளியங்குளம் தோழர் மா. தனிக்கோடி—தோழியர் மகாலட்சுமி திருமணம் தோழர் வ. பெ. வடிவேல் தலைமையில் நடைபெற்றது. மணமக்களுக்கு ம. புளியங்குளம் தி. மு கழகக் கிளையின் சார்பில் வாழ்த்திதழ் அளிக்கப்பட்டது. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

20—10—55 காலை 8 மணிக்கு, புதுவை குருசபதியில், தோழர் சொ. வீராசாமி—தோழியர் மு. சகுந்தலை திருமணம் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது தோழர் அன்பரசன் மணமக்களைப் பாராட்டிப் பேசினார். மணமக்கள் சார்பில் புதுவை தி மு. கழகக் கிளைக்கு நன்கொடையாக ரூ. 1ம், 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கென ரூ. 1-ம் நன்கொடையளிக்கப்பட்டது — 'நம் நாடு' அன்பளிப்புத் தொகையினை வரப் பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதி தமிழ் நாட்டில்—என்றுதானே, பிரித்துவைக்கப்பட்டிருக்கின்றனர்?

"அந்தந்த மொழி பேசும் இராணுவப் பிரிவினரை, அந்தந்த வட்டாரங்களிலே ஏன் வைத்திருக்கக்கூடாது? இந்தச் சமாதான காலத்தில்கூட, இராணுவ வீரர்கள் தங்கள் குடும்பத்தாருடன்—உற்றார் உறவினருடன் வாழ்வதற்கு ஏன் அனுமதிக்கக்கூடாது? 'போர்க் காலம்' என்றால், எங்கு வேண்டுமானாலும் அவர்களை அழைத்துச் செல்லட்டும்; சமாதான காலத்தில் தமிழ்நாட்டு வீரர்களடங்கிய 'பட்டாலியன்' தமிழ் நாட்டில் ஏன் இருக்கக்கூடாது? காஷ்மீரில் யுத்தம் என்றால், அப்போது அவர்களை அழைத்துச் சென்று அங்கு கொன்று குவிக்கட்டும்—கவலை இல்லை; ஆனால், சமாதான காலத்தில், இராணுவத்தினரை ஏன் இப்படி, திக்கு வேறாக—திசை வேறாக வைத்திருக்க வேண்டும்? 'குறிப்பிட்ட மொழி வழங்கும் பகுதியில், அந்த மொழி பேசும் இராணுவத்தினர் இருக்கக்கூடாது' என்று, என்ன காரணத்திற்காக இந்தியப் பேரரசு கருதுகிறது? இது, பிரித்தாளும் சூழ்ச்சி என்பதைத் தவிர, வேறு என்ன? இது ஏகாதிபத்தியப் போக்கல்லவா?

"இந்த ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து நாம், நமது நாட்டை விடுவிக்கவேண்டும்—என்று கூறுவது, எந்த வகையில் தவறுடையதாகும்?

"இப்படி வடநாட்டவருடைய ஒவ்வொரு நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்து, அவர்கள் எவ்வளவு பெரிய சதி செய்து நம்மை அடிமை கொண்டிருக்கின்றனர் என்று நாம் தெளிவான விளக்கங்களைத் தந்துதான், 'நம்முடைய நாடு நமக்காகவேண்டும்' என்று கேட்கிறோம்."

—இவ்வாறு, 23—10—55 அன்று, மீர்சாகிப்பேட்டையில், சென்னை 43-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:—

"மந்திரி சுப்பிரமணியம் சில நாட்களுக்கு முன்பு சொன்னார்—'நேருவுக்கு தமிழ் மக்கள்மீது தனிப் பிரியம் உண்டு; எனவே, தமிழர்களது கோரிக்கையை சாதகமாகவே கவனிப்பார் என்று நம்புகிறேன்; அப்படி அவர் கவனிக்காவிட்டாலும், அவர் சொல்வதை நாம் கேட்டுக்கொள்ள வேண்டும்'—என்று, தாசானுதாசனைப் போலக் கெஞ்சியிருக்கிறார். ஏன் இந்த நிலைமை? 'தமிழ் நாட்டு மக்களின் விருப்பம் இது—இதை நிறைவேற்ற வேண்டும்'—என்று, ஏன் இவரால் நேருவிடம் துணிவுடன் கேட்க முடியவில்லை? 'நான் அப்படி வாதாடுகிறேன்—நியாயமான நமது கோரிக்கையை நிறைவேற்றுகிறேன்' என்று, தமிழ் மக்களுக்கு இவர் ஏன் நம்பிக்கை ஊட்ட முடியவில்லை? இவருக்கு அந்தத் துணிவு இல்லை என்பதைத் தவிர, வேறென்ன? இவரைப் போன்றவர்களையெல்லாம் மிரட்டுகிற ஆற்றலும், வழியும் டில்லி சர்க்காரிடம் குவிந்துகிடக்கிறது என்பதால்தானே, இந்த மந்திரிகள் கைகட்டி வாய்பொத்தி நிற்க வேண்டியவர்களாயிருக்கின்றனர்."

தோழர் சம்பத் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் வடநாட்டவரின் ஏகாதிபத்தியப் போக்கிற்கு மேலும் பல காரணங்களைச் சுட்டிக்காட்டிவிட்டு, தி. மு. கழகம், தென்னாட்டு மக்களின் எண்ணங்களைத்தான் பிரதிபலிக்கிறது என்றும், மக்களது எண்ணங்களுக்குத்தான் — உணர்ச்சிகளுக்குத்தான்—'கோரிக்கை, பிரச்சினை' என்ற உருவங்களைக் கொடுத்து வருகின்றது என்றும் விளக்கிக் கூறினார்.

தேர்தல்கள் குறித்தும், அவற்றில் காங்கிரசார் கையாண்டுவரும் கேவலமான முறைகளைக் குறித்தும், காங்கிரசார் இன்று புனுகிற புதுவேடங்களை வெட்ட வெளிச்சமாக்கியும் அரிய கருத்துரை வழங்கினார்.

'மேயர்' பதவிக்காலம்!

சென்னை, அக் 28—

நகரசபையில் 'மேயர்' பதவிக் காலம் ஓராண்டிற்குமேல் இருக்கக்கூடாது என்பதில் முன்னாள் மேயரான டி. செங்கல்வராயனுக்கும், இப்போதைய மேயரான எம். ஏ. சிதம்பரத்திற்கும் கருத்து ஒற்றுமை இருப்பது தெரியவந்துள்ளது.

இப்போதைய நகர சபையின் இறுதிக் கூட்டத்தில் பேசுகையில், மேயர் சிதம்பரம் 'என்னைப் பொறுத்தமட்டில், மேயர் பதவிக்கு ஓராண்டுகூட, சிறிது அதிகமானது' என்று கருத்தறிவித்திருக்கிறார்.

'ஓராண்டு என்ற குறுகிய பதவிக் காலம், பதவியிலிருப்போர் இடைவிடாது வேலை செய்வதற்குத் தூண்டுவதாகும்,' என்று முன்னாள் மேயரான செங்கல்வராயன் அதே கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

இரு ஆண்டிற்குக் கவலையில்லையாம்!

சென்னை, அக் 29—

சென்னை நகருக்கு இரண்டாண்டிற்குப் போதுமான குடி தண்ணீர் இருக்கிறது. நகருக்குத் தண்ணீர் விநியோகம் செய்யும் எல்லாத் தேக்கங்களும் நிரம்பியுள்ளன. புழலேரி நீர்மட்டம் முழு அளவு எய்துவதற்கு இன்னும் கால் அடி அளவு தண்ணீர்தான் தேவையாக இருக்கிறது.

எகிப்து—இஸ்ரேல் தாக்குதல் ஆரம்பம்?

ஜெருசலேம், அக். 28—

எகிப்து—இஸ்ரேல் எல்லையில், இருதரப்புப் படையினருக்கு இடையே கடும் போராட்டம் நடைபெற்றுள்ளது. முதலில் ஒரு எகிப்து இராணுவ தளத்தை இஸ்ரேல் படை தாக்கி, ஐவரைக் கொன்றதாகவும், 20 பேரை சிறைப்படுத்தியதாகவும் அறிவிக்கப்பட்டதாம்.

'பழிக்குப் பழி' வாங்குவதாக இஸ்ரேல் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

எகிப்து அதிகாரி ஒருவர், 4 இஸ்ரேலியரும், 4 எகிப்தியரும் சண்டையில் உயிரிழந்ததாகக் கூறியுள்ளார்.

எந்த நிலைமையும் சமாளிப்பதற்காக, இஸ்ரேல் எல்லை அருகில் எகிப்து படையினர் தயாராக உள்ளனராம்.

பிளவு ஏற்படுமா?

பாகிஸ்தானிலுள்ள அவாமி லீக் கட்சியில், அப்துல் கபார் கானைச் சேர்த்துக்கொள்ளுவது சம்பந்தமாக பிளவு ஏற்படக்கூடுமாம்! ஊழியர்கள் பலர், அவர், லீகில் சேருவதை எதிர்க்கின்றனர்.

செஞ்சட்டை நிறுவனத்திற்குக் குந்தகம் ஏற்படாமலிருக்குமானால் அவாமி லீகில் சேர்ந்து எதிர்கட்சியைப் பலப்படுத்துவதற்கு, கபார்கான் தயாராக இருக்கிறாராம்.

அண்ணுதுரை

சுற்றுப்பயணம்

அக். 28, 29 } திருச்சி — மாநில மாநாடு சம்பந்தமான ஏற்பாடுகள் பற்றி ஆலோசனை

30 கும்பகோணம்:
காலை—சிறப்புச் சொற்பொழிவு;
மாலை-ஆங்கிலச் சொற்பொழிவு;
இரவு 7 மணி-பொதுக் கூட்டம்

31 காலை: விழுப்புரம்—திருமணம்;
மாலை: சிறுவந்தாடு—பொதுக்கூட்டம்

சென்னை மாவட்ட தி.மு.கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

"30-10-55 மாலை 4 மணிக்கு, இராயபுரம், 'அறிவகத்'தில் கூடவிருக்கும் செயற் குழுக் கூட்டத்திற்கு மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் வருகைதர வேண்டுகிறேன்,"

என்று, சென்னை மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் இளம் பரிதி அறிவிக்கிறார்.

அண்ணுமலை நகர்

தி.மா.மு.கழக 5-ம் ஆண்டு விழா

31-10-55 மாலை 4½ மணிக்கு, அண்ணுமலை நகர், திருவேட்களம் குளக்கரையில் நடைபெறும். தோழர் ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவாற்றுவார்.

சென்னை 4-வது வட்ட தி.மு. கழக பணிமனை துவக்க விழா

30—10—55 காலை 10 மணிக்கு சென்னை 4-வது வட்ட தி. மு. கழகப் புதிய பணிமனையை, மணிகண்ட முதலி 1-வது தெருவில், தோழர் கே. கோவிந்தசாமி துவக்கி வைப்பார்.

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

30—10—55 காலை 8 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது, 6-வது ஆண்டு விழா வரவு-செலவு, 8—10—55-ல் நடைபெற்ற பொதுக்கூட்ட வரவு-செலவு, கழகப் பணிமனை மாற்றம், துணைச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி தேர்தல் ஆகியவை பற்றி முடிவு செய்யப்படும்.

இலங்கை—கொள்ளுப்பிட்டி தி.மு.கழக உறுப்பினர்கட்கு

"4—11—55 இரவு 9-30 மணிக்கு, இலங்கை தி. மு கழக கொள்ளுப்பிட்டி கிளையின் உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெறும்.

"கழக ஆண்டு விழா நிதி அறிக்கை பெற்றுள்ள இயக்கத் தோழர்கள் 4—11—55-க்குள் பொருளாளர் அய்யப்பா அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டுகிறேன்,"

என்று, செயலாளர் தோழர் இரா. ச. பொன்னம்பலம் அறிவிக்கிறார்.

குறள் வகுப்பு

30—10—55 மாலை 5 மணிக்கு, சென்னை-பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட், ஆண் பள்ளியில், சென்னை கல்விச் சங்கத்தின ஆதரவில், தோழர் த. வே. முருகேசனார் தலைமையில் நடைபெறும். 'குறட் சிறப்பு' எனும் பொருள் பற்றி தோழர் கே. வி. இராமகோட்டி சொற்பொழிவாற்றுவார்

* * *

30—10—55 காலை 9 மணிக்கு, திருச்சி, எண் 1, பெரிய செட்டித் தெரு, பாண்டியன் படிப்பகத்தில், திரு. தி. மா. தருமராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின் டில்லியில் மாபெரும் பொருட்காட்சி விழா

21-அந்நிய நாடுகள் இடம் பெற்றுள்ளன

புதுடில்லி, அக். 29—

இரண்டாவது உலக யுத்தத்திற்குப்பின், ஆசியாவிலேயே மிகப் பெரியதாக—சுமார் 80 ஏக்கர் நிலத்தில், புதுடில்லிக்குக் கிழக்கே மதுரா பாதையில் நடைபெறும் இந்தியக் கைத்தொழில் பொருட்காட்சி விழாவை, இன்று, பிரதமர் நேரு ஆரம்பித்துவைத்தார்.

இந்தியாவைத் தவிர்த்து 21 அந்நிய நாடுகள் பங்கேற்றுள்ள இக் கண்காட்சி நிர்மாணிப்பில், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நேரத்துடன் போட்டியிட்டுப் பணியாற்றுகின்றனர்.

6 வாரங்கள் நடைபெறும் இக் கண்காட்சியில் விளையாட்டுப் பொம்மை முதல் டெலிவிஷன் வரை இடம் பெற்றுள்ளது.

கட்டிடங்கள் உள்ளிட்ட எல்லா ஏற்பாடுகளுக்கும் ரூ. 5 கோடி செலவிடப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்யா, மேற்கு ஜெர்மனி, யூகோஸ்லேவியா, பெல்ஜியம், ருமேனியா, போலந்து, அமெரிக்கா, பிரிட்டன், நெதர்லாந்து, ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ், இராக், ஈரான், கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லோவேகியா, பர்மா, சீனு, ஆஸ்டிரியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கண்காட்சியில் பங்கேற்றுள்ளன.

கண்காட்சியில், இந்தியக் கைத்தொழில், கைநுட்பத் தொழில் பொருள்களும் தென்னாட்டுப் பட்டு சேலை, காஷ்மீர சால்வை, காஞ்சிபுரம் பட்டுக் கைத்தறி, சென்னை கைத்தறி கைகுட்டை நெசவுத் தறி ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இந்தியாவின் பழங்காலக் கைநுட்பத் தொழில்கள் டெலிவிஷனில் இடம் பெறும்; அமெரிக்கப் பகுதியில், இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆக்க வேலைகளுக்கு அணு சக்தியை உபயோகிப்பதைப் பற்றிய சாதனங்களும் அணு உலையின் மாதிரி ஒன்றும் அமெரிக்கப் பகுதியில் இருக்கிறது.

ரஷ்யப் பகுதியில் லெனின் உருவச்சிலை தோற்றமளிக்கிறது. விவசாய இயந்திரக் கருவிகள், டெலிவிஷன், வானொலி சாதனங்கள், நட்சத்திரங்கள் பற்றி அறிவிக்கும் பிளானிடேரியம் ஆகியவற்றை அப்பிரிவில் குறிப்பிடலாம்.

கிழக்கு ஜெர்மன் பகுதியில் உள்ள பொருள்கள், அவர்களுடைய தொழில் நுட்பத் திறமைகளை விளக்கிக் காட்டுபவையாக இருக்கின்றன.

போலந்து நாட்டின் விளையாட்டுப் பொருள்கள் சிறப்புற உள்ளன.

சீனப் பகுதியில், மா-சே-துங் உருவச்சிலை நிறுவப்பட்டுள்ளது; பழங்கால அரண்மனையொன்று தோற்றமளிக்கிறது; பல்வேறு இயந்திரங்கள் சிறப்புற அமைந்துள்ளன.

செக்கோஸ்லாவேகியா பகுதியில் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், மோட்டார்கள் பிரதானமான இடம் பெற்றுள்ளது.

யூகோஸ்லாவியா பகுதியில் மின்சாரக் கருவிகள், எக்ஸ்—ரே, மருத்துவ இரண சிகிச்சைக் கருவிகள் உள்ளன.

ஹங்கேரி பகுதியில் அந்நாட்டு இல்லங்களில் உபயோகிக்கப்படும் சாமான்களும், ரேயான் துணிகளும், கண்ணாடிச் சாமான்களும் வைக்கப்பட்டுள்ளன.

ஈரான் பகுதியில் அழகுமிக்க ஜமுக்காளம் ஒன்று அணி செய்கிறது.

பொதுக்கூட்டம்

30-10-55 மாலை 5½ மணிக்கு, சென்னை-இராயபுரம், புதுமனைக் குப்பம் எதிர் மைதானத்தில், வட சென்னை மீன் பிடிப்போர் பாதுகாப்புக் கமிட்டிச் சார்பில், தோழர் டி. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும். தோழர் என். ஜீவரத்தினம், மற்றும் பலர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

30-10-55 காலை 10 மணிக்கு, சென்னை 27-வது வட்ட அறிவியக்க மன்றத்தில், தோழர் மு. வச்சிரவேலு தலைமையில் நடைபெறும். 'பண்பு' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திருமணங்கள்

30—10—55 காலை 9-30 மணி அளவில், சேலம்-ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் மணமகன் இல்லத்தில், தோழர் என். ஏ. பெரியசாமி—தோழியர் தனபாக்கியம் திருமணம், தோழர் பி. எம். ரங்கசாமி தலைமையில் நடைபெறும். தோழர் முகவை ஆர் எஸ் பாண்டியன் வாழ்த்துரை வழங்குவார்.

* * *

30—10—55 காலை 10½ மணி அளவில், சேரன்குளம், கடைவாசல் தெரு, மணமகன் இல்லத்தில், தோழர் சே. ரா. மதியழகன்—தோழியர் சண்முகவல்லி திருமணம், தோழர் ப. நாராயணசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் எஸ் சிங்காரவேல், கோ. சிவஞானம், இராசு. மதிவாணன் ஆகியோர் பேசுவர்.

பிரெஞ்சு மந்திரி சபை பிழைத்தது

பாரிஸ், அக் 28—

'நித்திய கண்டம், பூரண ஆயுள்' என்ற ரீதியில் இயங்கிவரும் பிரெஞ்சு நாட்டு மந்திரி சபை இன்று மிகவும் கஷ்டப்பட்டு, தேசிய சட்டசபையில் நம்பிக்கைத் தீர்மானத்தில் வெற்றி பெற்றிருக்கிறது.

இந்தத் திங்களில் மூன்றாவது முறையாக எட்கார் பாரேயின் தலைமையில் உள்ள மந்திரி சபை கண்டம் தப்பியிருக்கிறது.

'ராடிகல்' கட்சியினர், சர்க்காரின் கொள்கைகளை ஆதரித்துத் தீர்மானம் கொண்டுவந்தனர்; சோஷலிஸ்டு கட்சியினர், அதனைக் கண்டித்துத் தீர்மானம் கொண்டுவந்தனர். சர்க்காருக்கு ஆதரவாக 271 வாக்குகளும், எதிராக 259 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

12 வாக்குகள் அதிகம் பெற்று மந்திரி சபை பிழைத்திருக்கின்றது.

'அந்நியர் ஆதிக்கத்தினின்று விடுதலை பெறுவோம்'

எகிப்து பிரதமர் முழக்கம்!

கெய்ரோ, அக். 27—

"அரபு நாடுகளின் சுதந்திரத்திற்கும், அந்நியரின் ஆதிக்கத்திலிருந்தும், கண்காணிப்பிலிருந்தும் அந்நாடுகள் முழு விடுதலை பெறுவதற்கு எங்களிடையே இராணுவ ஒப்பந்தங்கள் அவசியமாகும்,"

என்று, எகிப்து—சவூதி அரேபியாவுக்கிடையே இராணுவ ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதைப் பற்றிப் பேசுகையில், எகிப்து பிரதமர் கர்னல் நாசர் குறிப்பிட்டார்.

[ஒப்பந்தங்களின் விவரம் பற்றி 2-ம் பக்கத்தில் செய்தி வெளியாகியுள்ளது.]

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.